3. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *டாக்டர் க. கிருஷ்ணசாமி, என்ன? (குறுக்கீடு), சொல்லுங்கள்.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியினர் மற்றும் ஏழு மிகவும் பின்தங்கிய சமுதாயத்தைச் சார்ந்தவர்கள், ஆந்திர காவல் துறையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். மேலும். . .*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதுகுறித்து முன்னரே என்னிடம் நீங்கள் கொடுத்துள்ளீர்கள். (குறுக்கீடு) அது என் ஆய்வில் இருக்கிறது. பிறகு அதை எடுத்துக்கொள்கிறேன், உட்காருங்கள்.*

(உறுப்பினர்கள் டாக்டர் க. கிருஷ்ணசாமி, திருமதி எஸ். விஜயதரணி ஆகியோர் அவையிலிருந்து வெளியேறினர்.)

5. கவன ஈர்ப்பு

அம்மா சிமெண்ட் கூடுதல் பயனாளிகளுக்குக் கிடைக்க நடவடிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன், திரு. கே. தங்கவேல், திரு. ஏ. லாசர், திரு. ப. டில்லி பாபு, திரு. இரா. அண்ணாதுரை, திரு. க. பீம்ராவ், திரு. ஆர். ராமமூர்த்தி, திரு. வீ.பி. நாகைமாலி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

***திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அம்மா சிமெண்ட் கூடுதல் பயனாளிகளுக்குக் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது குறித்து" மாண்புமிகு தொழில்*

மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் படிப்பதற்கு விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள், வீடு கட்டும் ஏழை மற்றும் நடுத்தர வருமானமுள்ள மக்கள் சிமெண்ட் விலை ஏற்றங்களினால் ஏற்படும் இன்னல்களைப் போக்கும் பொருட்டு "அம்மா சிமெண்ட் விற்பனைத் திட்டம்" தமிழக அரசால் அறிவிக்கப்பட்டு 5-1-2015 அன்று திருச்சி மாவட்டம், திருவரங்கத்தில் துவக்கப்பட்டு அனைத்து மாவட்டங்களிலும் அம்மா சிமெண்ட் விற்பனைத் திட்டம் செயல்படுகிறது. தமிழ்நாட்டில் உள்ள 7 தனியார் சிமெண்ட் உற்பத்தியாளர்களிடமிருந்து மாதம் ஒன்றுக்கு 2 இலட்சம் மெட்ரிக் டன் கொள்முதல் செய்ய முடிவெடுக்கப்பட்டு, தமிழகத்தில் உள்ள அனைத்து மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள 470 கிட்டங்கிகளில் இருப்பு வைத்து, மூட்டை ஒன்றுக்கு 190/- ரூபாய் என்ற விலையில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு, இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், இத்திட்டமானது தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின்கீழ் இயங்கிவரும் மாவட்ட அளவிலான ஊராட்சித் துறையின் மகளிர் சுய உதவிக் குழுக்கள்மூலம் 22 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் வீடு கட்டுவோர்கள் 100 சதுர அடிக்கு 50 மூட்டைகள் வீதம் அதிகபட்சம் 1,500 சதுர அடிக்கு 750 மூட்டைகள் வரை சலுகை விலையில் சிமெண்ட் பெற்றுக்கொள்ளலாம். இத்திட்டத்தின்கீழ் பயன்பெற விரும்புவோர் அங்கீகரிக்கப்பட்ட கட்டட திட்ட வரைபடத்தையோ அல்லது

2015 ஆகஸ்ட் 27] [திரு. பி. தங்கமணி]

கிராம நிருவாக அலுவலர்/வருவாய்த் துறை அலுவலர்/பஞ்சாயத்து யூனியன் மேற்பார்வையாளர்/பஞ்சாயத்து யூனியன் சாலை ஆய்வாளரின் சான்றிதழையோ பெற்று சமர்ப்பிக்க வேண்டும். வீடுகள் புதுப்பிக்க மற்றும் பழுதுபார்க்க 10 முதல் 100 மூட்டைகள் வரை சிமென்ட் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கான அரசாணை, தொழில் துறைமூலம் 11-12-2014 அன்று வெளியிடப்பட்டு இத்திட்டத்தினைச் செயல்படுத்தும் நடைமுறைகள் குறித்தும், பயனாளிகள் இத்திட்டத்தினை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்தும் தெளிவான விளக்கங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அதன்படி பயனாளிகள் அங்கீகரிக்கப்பட்ட திட்ட வரைபடம் மற்றும் வருவாய்த் துறையினரால் வழங்கப்படும் சான்றுகள்மூலம் கிட்டங்கிகளில் பதிவு செய்து, அங்கீகரிக்கப்பட்ட அளவில் சிமென்ட் பெற்றுக்கொள்கிறார்கள்.

இத்திட்டத்தில் எந்தவிதமான முறைகேடுகளும் நடைபெறாவண்ணம் தமிழ்நாடு சிமென்ட் கழகத்தின் நிருவாக இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிருவாக இயக்குநர் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் அடங்கிய குழு மாநில அளவில் குறிப்பிட்ட இடைவெளியில் கண்காணிக்கிறது.

மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் இத்திட்டம் கண்காணிக்கப்படுகிறது. கோட்ட அளவில், உதவி ஆட்சியர்/வருவாய்க் கோட்டாட்சியர், கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர் மற்றும் ஊராட்சித் துறை உதவி இயக்குநர் மற்றும் டான்செம் நிறுவனத்தின் மண்டல மேலாளர்கள் ஆங்காங்கே கிட்டங்கிகளை திடீர் ஆய்வு செய்து இத்திட்டம் சிறப்பாகச் செயல்படுவதை உறுதி செய்கிறார்கள். மேலும், டான்செம் நிறுவனத்தின் அலுவலர்கள் மாதந்தோறும் மாவட்டங்களில் உள்ள கிட்டங்கிகளை கள ஆய்வு செய்து இத்திட்டத்தின் செயல்பாடுகளை நடைமுறைப்படுத்துகிறார்கள்.

இத்திட்டத்தின்மூலம் பெறும் சிமென்ட் விற்பனைத் தொகையை தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் வரைவோலையாகப் பெற்று, கிட்டங்கிகளில் சமர்ப்பித்து

அதற்கான சிமெண்ட்டை பெற்றுக்கொள்கிறார்கள். மேலும், இத்திட்டத்தின்மூலம் பயன்பெறும் பயனாளிகள் விவரம் மற்றும் தொகை கணினிமூலம் பதிவு செய்யப்படுகிறது. விற்பனைத் தொகை நேரடியாகப் பெறப்படுவதில்லை. எனவே, இத்திட்டத்தில் முறைகேடு நடைபெற வழிவகை இல்லை.

இத்திட்டத்திற்கு 7 தனியார் உற்பத்தியாளர்களிடம் மாதம் ஒன்றுக்கு 2 இலட்சம் மெட்ரிக் டன் கொள்முதல் செய்ய கேட்பு ஆணைகள் வழங்கப்படுகின்றன. தனியார் உற்பத்தியாளர்கள் ஜனவரி 2015 முதல் 25-8-2015 வரை 6,82,768 மெட்ரிக் டன், சராசரியாக 85,000 மெட்ரிக் டன் மாதந்தோறும் வழங்கி வந்தார்கள். கடந்த இரு மாதங்களில் சராசரியாக 1,09,434 மெட்ரிக் டன் வழங்கியுள்ளார்கள். எனினும், தேவைக்கேற்ப அனைத்து கிட்டங்கிகளுக்கும் சிமெண்ட் வழங்குவதற்கு டான்செம் நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது. எனவே, சிமெண்ட் பெறப்படுவதைப் பொறுத்து உடனுக்குடன் பொதுமக்களுக்கு சிமெண்ட் வழங்கப்படுகிறது. மேலும், முறையாகக் காத்திருப்போர் பட்டியல்மூலம் முன்னுரிமையில் சிமெண்ட் வழங்கப்படுகிறது. அவ்வப்பொழுது வரும் புகார்களுக்கு உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சில மாவட்டங்களில் பெறப்பட்ட புகார்களின் அடிப்படையில் டான்செம் நிறுவன நிருவாக இயக்குநர், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஏழையெளிய மக்களுக்காக தமிழக அரசால் செயல்படுத்தப்படும் மாண்புமிகு முதலமைச்சரின் சூரிய ஒளியுடன்கூடிய பசுமை வீடுகள் திட்டம் மற்றும் இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம் போன்ற வளர்ச்சித் திட்டங்களின் பயனாளிகளுக்குக் குறைந்த விலையில் அம்மா சிமெண்ட் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்மூலம் 6,61,472 மெட்ரிக் டன் சிமெண்ட் விற்பனை செய்யப்பட்டுள்ளது. 2,06,755 பயனாளிகள் பயனடைந்துள்ளார்கள். இத்திட்டம் தொடர்பான விவரங்களுக்குக் கட்டணம் இல்லா தொலைபேசியில் தொடர்பு கொண்ட 4,607 பயனாளிகளுக்கு உதவி மற்றும் விளக்கம் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

2015 ஆகஸ்ட் 27] [திரு. பி. தங்கமணி]

அம்மா சிமெண்ட் விற்பனை விவரம் (மெ. டன்)

மொத்த சிமெண்ட் கொள்முதல்	-	6,82,768
மொத்த சிமெண்ட் விற்பனை	-	6,61,472
இருப்பு	-	21,296
ஊரக வளர்ச்சித் துறைமூலம் விற்பனை	-	3,18,157
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் விற்பனை	-	3,43,315

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவையிலே சமர்ப்பித்துள்ள விவர அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். இந்த விவர அறிக்கையிலே உள்ள விவரப்படியும், ஏற்கெனவே விதி எண் 110-ல் அறிவித்த அறிவிப்பின்படியும் மாதம் இரண்டு இலட்சம் டன் சிமெண்ட்டை கொள்முதல் செய்வது அரசின் இலக்காக தீர்மானிக்கப்பட்டது. அப்படி கொள்முதல் செய்யப்படும் சிமெண்ட் ஏழையெளிய, நடுத்தர மக்களுக்கு மலிவு விலையில், 190 ரூபாயில் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், கடந்த 8 மாதங்களில் இந்த இலக்கின்படி 16 இலட்சம் டன் சிமெண்ட் கொள்முதல் செய்யப்பட்டிருக்க வேண்டும். 16 இலட்சம் டன் சிமெண்ட் ஏழையெளிய, நடுத்தர மக்களுக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இதுவரை கொள்முதல் செய்யப்பட்டிருப்பது 6 இலட்சத்து 82 ஆயிரம் டன்தான். இது நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 40 சதவிகிதம்கூட இல்லை என்பது வருத்தத்திற்குரியதாக உள்ளது. ஆகவே, கூடுதல் பயனாளிகள் பயன் பெறவில்லை என்பது அதிலேயே தெரிகிறது. அதேபோல், இந்த அறிக்கையிலேயே 'காத்திருப்போர் பட்டியலிலே இருப்போருக்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது' என்ற வாசகம் இந்த உண்மையைத்தான் சொல்கிறது, காத்திருப்போர் பட்டியல் மிக நீண்ட வரிசையில் இருக்கிறது என்றும், கிட்டத்தட்ட ஒரு இலட்சம் பேர் காத்திருக்கிறார்கள் என்கிற அளவுக்கு விவரங்கள்

[திரு. அ. சவுந்தரராசன்] [2015 ஆகஸ்ட் 27

இருக்கின்றன என்றும் பல நகரங்களிலிருந்து தகவல்கள் வருகின்றன. 6 மாதங்கள்கூட காத்திருக்கிறார்கள். பணத்தை முன்கூட்டியே செலுத்திவிட்டு காத்திருப்பது என்பது வேதனையளிக்கக்கூடியதாகும். இந்தப் பணத்தை வேறு செலவுகளுக்கும் அவர்களால் பயன்படுத்த முடியாமல் போகிறது. **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆதாரம் இல்லாமல் எதையும் சொல்லாதீர்கள். ஆதாரம் இருந்தால் மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடு) ஆதாரம் இல்லாமல் சொன்ன வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) கேள்வியை மட்டும் கேளுங்கள்.

முற்பகல் 11-35

திரு. அ. சவுந்தரராசன்: சரி. ஆகவே, 2 விஷயங்களில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஒன்று, தமிழகத்திலே இப்பொழுது வெளி மார்க்கெட்டிலே 400-லிருந்து 420 ரூபாய்க்கு சிமென்ட் விற்கப்படுகிறது. வெளி மாநிலங்களிலே அதைவிட குறைவான விலைக்கு விற்கப்படுகிறது. எனவே, வெளி மார்க்கெட் சிமென்ட்டின் விலையைக் குறைக்க ஒரு பக்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசு ஏற்கெனவே நிர்ணயித்திருக்கின்ற இலக்குப்படி கொள்முதல் செய்யவும், அவை வேகமாக, விரைவாக மக்களுக்குக் கிடைப்பதற்கான ஏற்பாட்டை செய்யவும் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே தவறு நடக்க கூடாது. ஏனென்றால், இப்பொழுது விநியோகிக்கப்பட்டிருக்கின்ற சிமென்ட்டால் எத்தனை பேர் பயனடைந்து இருக்கிறார்கள் என்கின்ற கணக்கையும் அறிக்கை சொல்கிறது. அதன்படி பயனாளி ஒருவர் சராசரியாக 63 மூட்டைகள்தான் பெற்றிருக்கிறார். 50 மூட்டைகளிலிருந்து 750 மூட்டைகள் வரை பயனாளிகளுக்கு சிமென்ட் வழங்கப்படும் என்று நம்முடைய அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2015 ஆகஸ்ட் 27] [திரு. அ. சவுந்தரராசன்]

அப்படியிருக்கும்போது வெறும் 63 மூட்டைகள் என்பது பொருத்தமானதாக இல்லை. ஆகவே, அரசாங்கம் இதில் எந்தத் தவறும் நடக்காமல் இருப்பதற்கு, இன்னும் சிறப்பான நிருவாக ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். இப்பொழுது நீங்கள் சொல்லியிருக்கின்ற விசாரணைக்கான ஏற்பாடாக மாவட்ட ஆட்சியர், அதேமாதிரி TANCEM நிறுவன இயக்குநர் என்பது மட்டும் போதாது. பயனாளிகள், உண்மையான பயனாளிகள்தானா என்பதைப் பரிசீலிப்பதற்கு இப்பொழுது எந்த ஏற்பாடும் இல்லை. அதற்கான ஏற்பாட்டை அரசு செய்ய வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன். அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்” என்ற இலட்சியத்தையே மனதில் தாங்கி உழைக்கும் நமது மாண்புமிகு அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) கொண்டு வந்த அற்புதமான திட்டம்தான் அம்மா சிமெண்ட். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது ஒரு இலட்சம் பேர் காத்திருப்பதாக அறிக்கை சொல்கின்றது என்று சொல்லியிருக்கின்றார்கள். தவறான கருத்து. ஒரு இலட்சம் பேர் காத்திருப்பதாக எங்கேயும் இல்லை. காத்திருப்போர் என்று அரசு அறிவித்திருப்பது என்னவென்று சொன்னால், ஒருவருக்கு 750 மூட்டைகள் என்று சொன்னால், உடனடியாக 750 மூட்டைகளையும் வழங்குவது இல்லை. ஏனென்று சொன்னால், 750 மூட்டைகளை ஒட்டுமொத்தமாகக் கொடுக்கின்றபோது, ஏதாவது தவறு நடந்துவிடக் கூடாது என்பதற்காக 100 மூட்டைகள், 200 மூட்டைகள் என்றுதான் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். அந்தவகையிலேதான் காத்திருப்போர் பட்டியல் என்று சொல்கின்றோமேயொழிய, ஏதோ பணத்தைக் கட்டிவிட்டு காத்துக் கொண்டிருப்போர் என்று அர்த்தம் கிடையாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலிலே புரிந்துகொள்ள வேண்டும்.

[திரு. பி. தங்கமணி] [2015 ஆகஸ்ட் 27

இரண்டாவதாக, 2 இலட்சம் பேருக்கு மேல் பயனடைந்திருக்கிறார்கள் என்பதை சராசரியாகப் பார்க்கின்றபோது 63 மூட்டைகள் என்று சொல்கின்றார். Repair செய்வதற்கு 10 மூட்டையிலிருந்து 100 மூட்டைகள் வரை தருகின்றோம். 1,500 சதுர அடிக்கு 750 மூட்டைகள் வரை தருகின்றோம். Repair-க்கு 10 மூட்டைகள் எடுத்திருக்கலாம். புது வீடு கட்டுபவர்கள் 1,500 மூட்டைகள் எடுத்திருக்கலாம். எனவே, சராசரியாக கணக்கைப் பார்க்கின்றபோது, 60 மூட்டைகள் என்பது தவறான கணக்கு. எவ்வளவு பயனாளிகள் பலன் பெற்றிருக்கின்றார்கள், புது வீடு கட்டியவர்கள் எத்தனை பேர், repair செய்தவர்கள் எத்தனை பேர் என்ற பட்டியல் என்னிடம் தனித்தனியாக இருக்கின்றது. அந்தப் பட்டியலை நான் உங்களிடத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்திரா நினைவுக் குடியிருப்பு-I.A.Y.-ல் வீட்டைக் கட்டுகின்றபோது ஏற்கெனவே இருந்ததைவிட குறைவாக இப்பொழுது 190 ரூபாய்க்கு சிமெண்ட்டினைக் கொடுக்கின்ற காரணத்தினால், ஒவ்வொரு வீட்டுக்கும் கிட்டத்தட்ட 2,500 ரூபாய் அந்தப் பயனாளிகளுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள்.

பசுமை வீட்டிற்கு ஏற்கெனவே ஊரக வளர்ச்சித் துறை மூலமாக 235 ரூபாயிக்கு நாம் வழங்கிக் கொண்டிருந்தோம். இப்பொழுது 190 ரூபாய்க்கு கொடுக்கின்றபோது அதிலே ஒவ்வொரு வீட்டிற்கும் 5 ஆயிரம் ரூபாய் கூடுதலாக அந்தப் பயனாளிகளுக்குக் கிடைக்கின்றவகையில் மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். ஆக, எந்தவகையிலும் இந்தத் திட்டத்தில் நீங்கள் சொல்வதைப்போல தவறு நடக்கவில்லை.

இன்னொன்று, 300 ரூபாய்க்கு விற்பதாகச் சொல்லியிருக்கின்றீர்கள். குறிப்பிட்டு ஒரே ஒரு இடத்தை நீங்கள் சொல்வீர்கள் என்றால் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தயாராக இருக்கின்றது.

2015 ஆகஸ்ட் 27] [திரு. பி. தங்கமணி]

ஏனென்று சொன்னால், மாவட்ட ஆட்சியர் மட்டுமல்லாமல், கூட்டுறவு இணையாளர் மற்றும் கோட்டாட்சியர் உள்ளிட்ட அரசுத் துறை அதிகாரிகளும், அதேபோல ஒவ்வொரு வட்டாரத்திலும் இருக்கின்ற வட்டார அலுவலர்களும், ஊராட்சியைச் சேர்ந்தவர்களெல்லாம் அதைப் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றார்கள். எந்தவகையிலும் ஒரு மூட்டையில்கூட தவறு நடந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான், புது வீடு கட்டுபவர்களுக்கு 750 மூட்டைகளை உடனடியாக வழங்குவதில்லை. 100 மூட்டைகள், 200 மூட்டைகள் என்றுதான் நாங்கள் வழங்கிக் கொண்டிருக்கின்றோம். அப்படி ஏதாவது தவறு நடந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கவனித்துக் கொண்டிருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், கடந்த காலத்தை நீங்கள் சிறிது நினைத்துப் பார்க்க வேண்டும். தேவைக்கேற்பத்தான் நாம் order செய்ய முடியும். 2 இலட்சம் மூட்டைகள் என்பது மாண்புமிகு அம்மா அவர்களுடைய கொள்கை. மாண்புமிகு அம்மா அவர்கள் அதைச் சொல்லியிருக்கின்றார்கள். எவ்வளவு தேவை இருக்கிறது என்பது அறிக்கையில் இருக்கின்றது, நீங்கள் பார்த்திருப்பீர்கள். 6 இலட்சத்து 82 ஆயிரம் டன் கொள்முதல் செய்யப்பட்டு இருக்கின்றது. 6 இலட்சத்து 61 ஆயிரம் டன் மட்டும்தான் விற்பனையாகி இருக்கின்றது. 21 ஆயிரம் டன் இன்னும் கையிருப்பில் இருக்கின்றபோது, தேவைக்கேற்பத்தான் நாங்கள் சிமெண்ட் கொள்முதல் செய்வோமேயொழிய, கிட்டத்தட்ட 14 இலட்சம், 16 இலட்சம் மூட்டைகளை இருப்பு வைப்பதற்கு இடம் வேண்டும், Godown வேண்டும். Godown-ல் இடம் இல்லாதபோது தேவையானவற்றை உடனடியாகக் கொடுங்கள் என்று சொன்னால், வைப்பதற்கு இடம் இல்லாமல் சிரமமாகிவிடும், தேவைக்கேற்ப, எந்தெந்தப் பகுதிக்கு அதிகமாகத் தேவைப்படுகின்றதோ, அந்தந்தப் பகுதியில் உள்ள பயனாளிகளுக்கு உடனடியாக வழங்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். அந்தவகையிலே வழங்கிக் கொண்டிருக்கின்றோம்.

முற்பகல் 11-40

கடந்த காலத்திலே, இந்தத் திட்டம் எவ்வாறு செயல்படுத்தப்பட்டது என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். கடந்த கால ஆட்சியில் 2007-2008 ஆம் ஆண்டு வெறும் 48,000 பயனாளிகள். 2008-2009 ஆம் ஆண்டு கிட்டத்தட்ட 4 ஆண்டு காலத்தில் அவர்கள் 5 இலட்சம் டன்தான் மொத்தமே வழங்கியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 52,000 பேர்தான் பயனடைந்திருக்கிறார்கள். ஆனால், இந்த 7 மாத காலத்திற்குள் ஏறக்குறைய 2,06,000 பேர் பயனடைந்திருக்கிறார்கள் என்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய திட்டம் எந்தளவிற்கு மக்கள் மத்தியில் சிறப்பான வரவேற்பைப் பெற்றிருக்கிறது என்பதை நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு அம்மா அவர்களுடைய திட்டத்தைப் பார்த்து, கர்நாடகாவிலிருந்து அரசுத் துறைச் செயலாளரும், ஆந்திராவிலிருந்து அரசுத் துறைச் செயலாளர்களும் வந்தார்கள். 'இந்தத் திட்டத்தை நீங்கள் எவ்வாறு செயல்படுத்துகிறீர்கள்' என்று கேட்டபோது, '1,500 சதுர அடி என்று யாருக்கும் நாங்கள் வரைமுறை வகுக்கவில்லை. வீடு கட்டுபவர்கள் யாருக்கு வேண்டுமானாலும் நாங்கள் கொடுக்கின்றோம்' என்று சொன்னவுடன், 'குடும்ப அட்டைக்குத்தான் ஏற்கெனவே தமிழகத்தில் கொடுப்பதாகச் சொன்னார்களே, இப்பொழுது நீங்கள் மாற்றிச் சொல்கிறீர்களே' என்று அவர்கள் கேட்டார்கள். 'மாண்புமிகு அம்மா அவர்கள் அப்படியில்லை, வீடு கட்டுபவர்கள் யாராக இருந்தாலும், 1,500 சதுர அடி வரை வீடு கட்டுபவர்களுக்கு கொடுக்கவேண்டுமென்று' ஆணையிட்டிருக்கிறார்கள் என்று சொன்னவுடன், 'குடும்ப அட்டை உள்ளவர்களுக்கு மட்டும் என்று இருந்தால் நாங்கள் இந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம் என்று வந்தோம். குடும்ப அட்டை உள்ளவர்களுக்கு மட்டும் இல்லாமல் அனைவருக்கும் கொடுக்கப்படுகிறது என்று சொன்னால், நாங்கள் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியாது' என்று அவர்கள் சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார்கள். ஆக, இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் மாண்புமிகு அம்மா அவர்கள்

2015 ஆகஸ்ட் 27] [திரு. பி. தங்கமணி]

கொண்டுவந்திருக்கின்ற ஒவ்வொரு திட்டத்தையும் (மேசையைத் தட்டும் ஒலி) மற்ற மாநிலங்களில் இருந்து வந்து பார்த்துப் பார்த்துச் சென்று, இந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள்.

கடந்த காலத்திலே 100 சதுர அடிக்கு அவர்கள் 40 மூட்டை என்ற அளவை மட்டும்தான் வைத்திருந்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் இப்பொழுது அந்த அளவை 50 மூட்டையாக வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். 1,500 சதுர அடி வரை வீடு கட்டுகிறவர்களுக்கு கடந்த கால ஆட்சியில் 600 மூட்டைகள் என்ற அளவில் இருந்தது. இப்பொழுது அந்த அளவை உயர்த்தி, 750 மூட்டைகளாகக் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். ஆக, எந்தப் பயனாளியாக இருந்தாலும், தேவையென்று சொன்னால், இன்று வழங்கப்பட்டிருக்கின்ற Toll Free Number அறிக்கையிலேயே இருக்கிறது. இதுகாறும் 4,607 பேர் இத்திட்டம் குறித்து எங்களுக்குத் தகவல் சொல்லியிருக்கின்றார்கள். அந்த 4,607 பேரும் என்ன தகவல் சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால், கிட்டத்தட்ட 60 சதவிகிதம் பேர் சொல்லியது, நாங்கள் 1,500 சதுர அடி வீடு கட்டியதில், கிட்டத்தட்ட ஒரு இலட்சம் ரூபாய் முதல் ஒன்றேகால் இலட்சம் ரூபாய் வரை சிமெண்டால் மட்டும் எங்களுக்கு செலவு குறைந்திருக்கிறது. அதற்கு நன்றியைச் சொல்ல வேண்டும் என்று பாதிப் பேருக்குமேல் தொலைபேசியில் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான், இந்தத் தகவலை, ஏதோ அரசியலுக்காகச் சொல்லவில்லை. வருகின்ற தொலைபேசித் தகவல்கள் அனைத்தையும் பதிவு செய்திருக்கிறோம். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் யாருக்காவது சந்தேகம் என்று சொன்னால், அந்தப் பதிவைக் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நிச்சயமாகத் தயாராக இருக்கின்றது. ஆக, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், இன்னும் கூடுதல் பயனாளிகள் நிச்சயமாகக் கேட்பார்கள் என்று சொன்னால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கும். தேவையான மூட்டைகளை வாங்கி தேவையான பயனாளிகளுக்கு வழங்கும் என்பதில் மாற்றுக் கருத்தே இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.